

சென்னையிலுள்ள முகாம் அலுவலகத்திலிருந்து, செங்கல்பட்டு மாவட்டம் மாமண்டூரில் தமிழ்நாடு மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையத்தின் மூலம் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள நான்கு பனை பொருள் விற்பனை அங்காடிகளை காணொலிக் காட்சி வாயிலாக வனம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் நேற்று (2.1.2026) திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை செயலாளர் திருமதி.வே.அமுதவல்லி, தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின் செயற்பதிவாளர் வா.சம்பத், மற்றும் துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## கலைஞர் நகர் தெற்கு பகுதி இளைஞரணி நிர்வாகிகளுக்கு

# வட்ட வாரியாக சமூக வலைதளப் பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம்!

## பகுதி அமைப்பாளர் சி.எச்.தினேஷ் அறிக்கை!

சென்னை, ஜன. 03

சென்னை தெற்கு மாவட்டம், கலைஞர் நகர் தெற்கு பகுதி இளைஞரணி நிர்வாகிகளுக்கு வட்ட வாரியாக சமூக வலைதள பணிகள் குறித்த ஆலோசனை கூட்டம் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், மாவட்டக் கழகச் செயலாளர் மா.சுப்பிரமணியன் மற்றும் மாநில இளைஞரணி துணை செயலாளர் தூத்துக்குடி எஸ்.ஜோயல் ஆகியோர் வழிகாட்டுதலுடன், பகுதி துணை அமைப்பாளர்கள் ச.பிரபு, ஆர்.சரவணன், ப.பாலா, என்எஸ்.தென்னரசு, ரா.நவீன், ஆர்.கே.சுந்தர் ஒருங்கிணைப்பில், வட்ட அமைப்பாளர்கள் பா.மணிகண்டன், அ.கோகுல்பிரசாத், சுரா.விக்கி, மு.அர்ஷன், மோசஸ் ராஜ், சோ.செ.உதயநிதி, கோபி சங்குபிள்ளை தலைமையில், வட்ட கழகச் செயலாளர்கள் பூக்கடை ஆர்.பழனிசாமி, இராஜ் செழியன், பி.கே.குமார், கே.சதீஷ்கண்ணன், அ.கதிரேசன், சோ.செந்தில்குமார், ஜம்புமுருகன், முன்னிலையில் இன்று (03.01.2026 சனிக்கிழமை) மாலை 5 மணிக்கு 137 வது வட்டம், ராஜீவ் காந்தி நகர் பி.கே. அறக்கட்டளை, மாலை 5:30 மணிக்கு 137 (அ) வட்டம், அண்ணா மெயின் ரோடு ஏ.கே. அறக்கட்டளை, மாலை 6 மணிக்கு 137 (ஆ) வட்டம் சூலைபள்ளம் நாகாத்தம்மன் கோயில் தெரு, மாலை 6:30 மணிக்கு 138 மற்றும் 138 (அ) வட்டம், எம்.எல்.ஏ. வீடு, கங்கா நகர், ஜாஃபர்கான்பேட்டை, மாலை 7 மணிக்கு, 136 (அ) வட்டம், பாலசுப்பிரமணியம் சாலை, கலைஞர் நகர், மாலை 7.30 மணிக்கு 136 வட்டம், விஜயராகவபுரம் 5 வது தெரு உட்பட்ட 7 வட்டத்திலுள்ள வட்ட பாக அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது.

இதில் விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா, தலைமை செயற்குழு உறுப்பினர் க.தனசேகரன் எம்.சி, பகுதிக் கழகச் செயலாளர் கே.கண்ணன் எம்.சி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் (சமூக வலைத்தளம்) வி.சண்முகநாதன் ஆகியோர் கலந்து கொண்டு சமூக வலைதள பணிகள் குறித்து ஆலோசனை வழங்கி சிறப்பிக்கின்றனர்.

மேற்கொண்ட கூட்டத்திற்கு வட்டத் துணை அமைப்பாளர்கள், பாக அமைப்பாளர்கள் கலந்து கொள்ளுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

சென்னை தெற்கு மாவட்ட இளைஞரணி ஆர்ட்ஸ் டி.அசோக்குமார் நன்றி கூறுகிறார்.

## தாயுமானவர் திட்டத்தின்கீழ் ஜன.4,5 தேதிகளில்

# வீட்டிற்கே வந்து பொது விநியோகப் பொருள்கள் வழங்கல்!

சென்னை,ஜன.3-

சென்னை,ஜன.3-

தாயுமானவர் திட்டத்தில் ஜனவரி 4 மற்றும் 5 ஆகிய தேதிகளில் முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் இல்லத்திற்கே சென்று பொது விநியோகத்திட்ட பொருள்கள் விநியோகம் செய்யப்படுகிறது.

முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் 65 வயதிற்கு மேற்பட்ட முதியோர் மற்றும் மாற்றுதிறனாளிகளின் இல்லத்திற்கே சென்று பொது விநியோகத்திட்ட பொருள்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. இந்நிலையில், ஜனவரி மாதத்தின் 4 மற்றும் 5 ஆகிய தேதிகளில் சென்னையில் அண்ணாநகர், ஆலந்தூர், பெருங்குடி, சோழிங்கநல்லூர், தேனாம்பேட்டை, அடையாறு, திருவொற்றியூர், மணலி, மாதவரம், தண்டையார்பேட்டை, ராயபுரம், திரு.வி.க.நகர், அம்பத்தூர், கோடம்பாக்கம் மற்றும் வளசரவாக்கம் ஆகிய 15 மண்டலங்களில் கூட்டுறவுத் துறையின் கீழ் செயல்பட்டுவரும் 990 நியாயவிலைக் கடைகளின் விற்பனையாளர்கள் அத்தியாவசியப் பொருட்களை வீடு தேடி விநியோகம் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் பயன்பெறும் முதியோர் மற்றும் மாற்றுதிறனாளிகள் இத்திட்டத்தை தவறாமல் பயன்படுத்திகொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.




திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி பேரறிஞர் அண்ணா அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியின் நூற்றாண்டு நிறைவு விழா. வருகின்ற 6 ஆம் தேதி அன்று நடைபெறும் நிகழ்ச்சியை முன்னிட்டு பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த ராட்சத பலூனை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பறக்க விட்டார். உடன் சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, நகரச் செயலாளர் ஜி.ஆர்.திருமலை, நகர மன்ற தலைவர் காஞ்சனா சுதாகர், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், கழக சிறுபான்மை அணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, தலைமை ஆசிரியர் ஏ. கிறிஸ்டோபர் ஜெயக்குமார் மற்றும் நகராட்சி மன்ற உறுப்பினர்கள் தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.



சென்னை கிழக்கு மாவட்டம் அம்பத்தூர் தெற்குப் பகுதி 89வது வட்டத்திற்கு உட்பட்ட பாகம் எண் 327– ல் தமிழ்நாடு தலைகுனியாது! என் வாக்குச்சாவடி.. வெற்றி வாக்குச்சாவடி.. குறித்து ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ., 7வது மண்டலக் குழுத் தலைவர் பி.கே. மூர்த்தி எம் சி, , தெற்குப் பகுதிச் செயலாளர் டி.எஸ்.பி. இராஜகோபால் எம்.சி., எல்.பி. எஃப். மோகன், சன் முனியாண்டி, எம்.இ.எஸ். சந்தீப், கே. பிரபு, ஆகியோரின் முன்னிலையில், 89வது வட்டக் கழகச் செயலாளரும் மாமன்ற உறுப்பினருமாகிய எம்.இ.சேகர் தலைமையில் வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் BLA–2 மாறன், BLC முகவர்கள், BDA, BYO, நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.


